[Public]

# இலங்கை பற்றிய பன்னாட்டு நாணய நிதியத்தின் ஊடக அறிக்கை

## பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிரிவின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் அவர்களின் தொடக்கவுரைக் குறிப்புகள்

2023 மே 15

கொழும்பு, இலங்கை

மாலை வணக்கம். இவ்வூடக சந்திப்பில் இணைந்துகொண்டமைக்கு நன்றி கூறுகின்றேன். உங்கள் அனைவரையும் நேரடியாகக் காண்பது மகிழ்ச்சி அளிக்கின்றது.

நாட்டில் பல்வேறு வகையான ஆர்வலர்களுடனான பன்னாட்டு நாணய நிதியத்தின் ஈடுபாட்டினை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கைக்கான எனது முதலாவது விஜயத்தை மேற்கொண்டு நான் கொழும்புக்கு வந்துள்ளேன். நாட்டின் சனாதிபதி மற்றும் முக்கிய தலைவர்களை சந்திப்பதற்கு மேலதிகமாக எதிர்கட்சி, சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், ஆராய்ச்சி அமைப்புக்கள் போன்வற்றின் உறுப்பினர்களுடனும் வேறு ஆர்வலர்களுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்துவதற்கு எனக்கு இயலுமாகவிருந்தது. பீற்றர் புரூவர் தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுவொன்றும் தற்போது இலங்கையில் இருப்பதுடன் இவ்வாண்டின் பிந்திய பகுதியில் முதலாவது மீளாய்வுப் பணியை நோக்கிய கிரமமான ஆலோசனைகளுக்காக மே 23 வரை இங்கு இருக்கும். இக்குழு அதன் விஜயத்தின் இறுதியில் உங்களுடன் மேலும் தொடர்பூட்டல்களை மேற்கொள்ளும்.

இலங்கை பற்றி நான் கதைப்பதற்கு முன்னர், கண்ணோட்டத்தில் விடயங்களை முன்வைப்பதற்கு **உலகளாவிய மற்றும் பிராந்திய தோற்றப்பாடு** மீதான சில சிந்தனைகளை கூறுவதற்கு விளைகின்றேன்.

**2023ஆம் ஆண்டானது உலகளாவிய பொருளாதாரத்திற்கு சவால்மிக்க ஆண்டாக இருப்பதாகத் தோன்றுகின்றது.** வட்டி வீதங்கள் உயர்வடைதல் மற்றும் உக்ரேனில் ரஷ்யாவின் போர் என்பன நடவடிக்கை மீது தாக்கம் செலுத்துவதனால் உலகளாவிய வளர்ச்சியானது 2023இல் வேகம் குறைந்து கீழ் மட்டத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய பணவீக்கம் தளர்வடைகின்றது, ஆயினும் விடாப்பிடியாக உயர்வான மட்டத்திலே காணப்படுகின்றது. அத்துடன் ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் காணப்படும் வங்கித்தொழில் சார்ந்த அழுத்தங்கள், மிகையான நிச்சயமின்மையினை ஏற்கனவே சிக்கலான அமைப்பு முறையொன்றுக்குள் உட்செலுத்தியுள்ளன.

**இந்நிச்சயமற்ற உலகளாவிய பின்னடைவிற்கெதிராக ஆசிய-பசுபிக் ஆற்றல்வாய்ந்த பிராந்தியமொன்றாகக் காணப்படுகின்றது.** உலகம் முழுவதுமுள்ள பாரிய பொருளாதாரங்களுக்கிடையில் நலிவடைகின்ற வெளிநாட்டுக் கேள்வி மற்றும் நாணய சார் இறுக்கப்படுத்தல் என்பவற்றுக்கு மத்தியில், உள்நாட்டுக் கேள்வி இதுவரையிலும் வலுவானதாகக் காணப்பட்டது. ஆசிய மற்றும் பசுபிக்கின் வளர்ச்சி 2022இன் 3.8 சதவீதத்திலிருந்து இவ்வாண்டு 4.6 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இப்பிராந்தியம் உலகளாவிய வளர்ச்சிக்கு ஏறத்தாழ 70 சதவீதம் பங்களிக்கும். ஆசியாவின் ஆற்றல்வாய்ந்த தன்மையானது ஏனைய பிராந்தியங்களுக்கிசைவாக சீனாவின் மீட்சி மற்றும் இந்தியாவின் தாக்குப்பிடிக்கத்தக்க வளர்ச்சி என்பன மூலம் முதன்மையாகத் தூண்டப்பட்டிருக்கும் அதேவேளை ஆசியாவின் எஞ்சிய பாகங்களில் வளர்ச்சியானது 2023இல் கீழ் மட்டத்திலேயே காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**எவ்வாறாயினும், இவ்வாற்றல்வாய்ந்த தோற்றப்பாடானது பிராந்தியத்திலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் திருப்தியடையலாம் என்பதைத் சுட்டிக்காட்டவில்லை.** முதன்மைப் பணவீக்கம் தளர்வடைந்து வருகின்றது, ஆயினும் அநேகமான நாடுகளில் இலக்குகளுக்கு மேலேயே காணப்படுகின்ற, அதேவேளை மையப் பணவீக்கமானது மாற்றமடையாது இருக்குமென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய மற்றும் ஐக்கிய அமெரிக்க வங்கித்தொழில் துறைகளின் குழப்பநிலையிலிருந்து தோன்றுகின்ற கசிவுத்தாக்கங்கள் இதுவரையிலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், விசேடமாக நிறுவன மற்றும் வீட்டலகுத் துறைகளில் உலகளாவிய நிதியியல் இறுக்கமாக்கல் மற்றும் தளம்பல்மிக்க சந்தை நிலைமைகளுக்கான பாதிக்கப்படும் தன்மைகள் உயர்வடைந்து காணப்படுகின்றன. பிராந்தியத்தின் வளர்ச்சியானது ஐந்து வருடங்களில் அண்மைக்கால வரலாற்றிலேயே ஆகக்குறைந்த நடுத்தரகால எதிர்வுகூறலாக 3.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, வயதடைகின்ற சனத்தொகை, குறைவடைகின்ற உற்பத்தித்திறன் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்தான எச்சங்கள் உள்ளடங்கலாக காரணிகளின் ஒன்றிணைவொன்றினைப் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகள் எதிர்மறையானதாகக் காணப்படுகின்றன,** உலகளாவிய மற்றும் பிராந்திய மாற்றமடையாத விலை அழுத்தங்களின் சாத்தியப்பாடு, முன்னேற்றகரமான பொருளாதாரங்களில் நாணயக் கொள்கை பாதை தொடர்பிலான சந்தை நோக்குகளுக்குள் அத்துடன் அந்நாடுகளின் மத்திய வங்கிகளின் மூலம் தொடர்பூட்டப்படுகின்றவை என்பவற்றுக்கிடையிலான தொடர்பின்மை, உலகளாவிய நிதியியல் சந்தைகளில் மேலதிகக் குழப்பநிலை ஏற்படும் சாத்தியம், சீனாவின் நடுத்தரகால வளர்ச்சி மெதுவடைவதிலிருந்து பிராந்தியத்திற்கான பாதகமான கசிவுத்தாக்கங்கள் மற்றும் பாரியளவான புவி-பொருளாதார துண்டாடல் என்பன இதற்குக் காரணமாக அமைகின்றன.

**இச்சவால்மிக்க உலகளாவிய சூழல் இலங்கைக்கு எதனை உணர்த்துகின்றது?**

நீங்கள் அறிந்ததைப்போன்று இலங்கை, **கடந்தகால கொள்கை சார்ந்த தவறுகள் மற்றும் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட பொருளாதார அதிர்வுகள் காரணமாக கடுமையான நெருக்கடியொன்றினை எதிர்கொண்டு வருகின்றது.** இலங்கை மக்கள் மீதான குறிப்பாக, வறுமையான மற்றும் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினர் மீதான நெருக்கடியின் தாக்கம் பற்றியும் வெளிநாட்டு நிதியிடலுக்கு நாட்டின் பெறுவழியில் காணப்படும் தாமதத்தின் பொருளாதாரச் செலவுகள் பற்றியும் நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்.

இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்புகளுக்கு ஆதரவளிப்பதற்கு **மாச்சு 20 அன்று, பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன் கொண்ட 48-மாத நீடிக்கப்பட்ட நிதி வசதியினை ஒப்புதலளித்தது.** நெருக்கடியினைத் தீர்ப்பதை நோக்கிய மிக முக்கிய படியொன்றினை இது அடையாளப்படுத்தியது. நீடிக்கப்பட்ட நிதியியல் வசதி ஏற்பாட்டிலிருந்து ஏறத்தாழ ஐ.அ.டொலர் 330 மில்லியன் கொண்ட தொடக்க பகிர்ந்தளித்தலை இலங்கை உடனடியாகப் பெற்றுக்கொண்டது, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பவற்றிடமிருந்தானவை உள்ளடங்கலாக புதிய வெளிநாட்டு நிதியிடலை இது துரிதப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை மீள நிலைநிறுத்துவதை நோக்காகக் கொண்ட பலவீனமிக்க வெளிநாட்டுச் சூழல் மற்றும் உள்நாட்டு கொள்கை இறுக்கமாக்கல் என்பவற்றைக் கருத்திற்கொள்கையில் பொருளாதாரமானது 2024இல் 1.5 சதவீதம் கொண்ட நடுநிலையான வளர்ச்சியினைப் பதிவுசெய்வதற்கு முன்னர் 2023இல் 3 சதவீதத்தினால் சுருங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்கால எதிர்பார்க்கைகள், அத்தியாவசியமாக பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடனேயே இணைந்துள்ளன.

**தற்போதளவில் நீங்கள் அறிந்ததைப் போன்று நீடிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழ் ஆதரவளிக்கப்பட்ட மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது வலுவான கொள்கை வழிமுறைகள் மீது வலுவாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன் ஐந்து முக்கிய தூண்களுக்கு முன்னுரிமையளிக்கின்றது.**

**முதலாவதாக, நோக்குமிக்க வருவாய் அடிப்படையிலான இறைவரித் திரட்சிப்படுத்தல்,** அரசின் அத்தியாவசிய செலவினங்கள் அனைத்திற்கும் ஆதரவளிப்பதற்கான அதன் இயலுமையினை உறுதிசெய்வதற்கு வலுவான சமூகப் பாதுகாப்பு வலை, இறைவரி நிறுவனசார் மறுசீரமைப்புக்கள் அத்துடன் செலவு மீட்பு அடிப்படையிலமைந்த சக்தி விலையிடல் என்பவற்றுடன் இது, இணைந்து காணப்படுகின்றது.

**இரண்டாவதாக,** அரசாங்கத்தின் தொழிற்பாடுகளின் உறுதியான நிதியிடலை உறுதிசெய்வதற்கான படுகடன் மறுசீரமைப்பொன்றினூடானவை உள்ளடங்கலாக **பொதுப் படுகடன் நிலைபெறுதன்மையினை மீள நிலைப்படுத்தல்.**

**மூன்றாவதாக,** முதலீட்டுச் சூழலொன்றினையும் வளர்ச்சியினையும் பேணிவளர்ப்பதற்கும் வெளிநாடுகளிலிருந்து அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான இலங்கையின் இயலுமையினை உறுதிசெய்வதற்கும் குறிப்பாக வறுமையானவர்கள் மீதான பணவீக்கச் சுமையினை இல்லாதொழிப்பதற்கு மிகுந்த செலாவணி வீத நெகிழ்வுத்தன்மையின் கீழ் **விலை உறுதிப்பாட்டினை மீள நிலைநிறுத்துவதற்கும் ஒதுக்குகளை மீளக்கட்டியெழுப்புவதற்குமான பல்நோக்குமிக்க உபாயம்.**

**நான்காவதாக,** பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதில் நிதியியல் துறை அதன் முக்கிய வகிபாகத்தினை ஆற்றக்கூடியது என்பதனை உறுதிசெய்வதற்கு **நிதியியல் துறை உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்கான கொள்கைகள்.**

**அத்துடன் ஐந்தாவதாக, ஊழல் பாதிக்கப்படும் தன்மைகளை நிவர்த்திசெய்வதற்கும் வளர்ச்சியினை அதிகரிப்பதற்கும் கட்டமைப்புசார்ந்த மறுசீரமைப்புக்கள்.** மறுசீரமைப்புக்களிலிருந்து கடினமாக வென்றெடுத்த பிரதிபலன்கள் இலங்கை மக்களுக்கு நன்மையளிக்கின்றன என்பதை உறுதிசெய்வதற்கு ஊழலுக்குகெதிரான அத்துடன் ஆளுகை மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதிய ஆளுகைப் பரிசோதனைச் செயன்முறைக்குட்பட்ட ஆசியாவிலேயே முதலாவது நாடாக இலங்கை விளங்குகின்றது. பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுகை பரிசோதனை அறிக்கை இவ்வாண்டின் செத்தெம்பர் அளவில் வெளியிடப்படுதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது-மாச்சில் கொழும்பிற்கு விஜயம் செய்த குழு மிகமுக்கிய மறுசீரமைப்பு துறை மீது ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பவற்றுடன் நெருங்கி பணியாற்றியது.

பாராட்டத்தக்கவகையில், இலங்கை இவ் ஐந்து துறைகளிலும் சவால்மிக்க கொள்கை நடவடிக்கைகளில் பலவற்றை ஏற்கனவே நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது. **அதிகாரிகள் மற்றும் இலங்கை மக்கள் மூலம் வலுவான பொறுப்பேற்றலின் கீழ் மிகவும் பரந்தளவில் மறுசீரமைப்பு உத்வேகத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது தற்போது அத்தியாவசியமிக்கதாகும்.**

**வறுமையானவர்கள் மற்றும் பாதிக்கப்படத்தக்கவர்கள் மீதான மறுசீரமைப்புக்களின் பொருளாதாரத் தாக்கம் பொருத்தமான வழிமுறைகளைக் கொண்டு தணிக்கப்படவேண்டியுள்ளது.** இந்நோக்கில், புதிய சமூகப் பதிவகம் மற்றும் குறிக்கோள் தகைமை மூலப்பிரமாணத்தை நிறுவுதல் என்பனவூடாக குறைந்தபட்ச செலவிடல் தளம், நன்கு இலக்கிடப்பட்ட செலவிடுதல் என்பனவூடானவை உள்ளடங்கலாக சமூகப் பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்துவதற்கான அதிகாரிகளின் திடமான அர்ப்பணிப்பினை நாம் வரவேற்கின்றோம்.

**பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது பொருளாதார உறுதிப்பாட்டினை மீள நிலைநிறுத்துவதற்கும் நாட்டை நிலைபேறான வளர்ச்சிப் பாதையில் இடம்பெறச்செய்வதற்கும் இந்நெருக்கடி ஊடாக பணியாற்றுவதற்கு ஒன்றிணைவதற்கு அனைத்து இலங்கையர்களுக்குமான வாய்ப்பொன்றாகும். இதில் முக்கியமானது நடைமுறைப்படுத்தலாகும். பன்னாட்டு நாணய நிதியம் இங்கு உங்களது பயணத்தில் உங்களுக்கு துணையளிப்பதற்காகவேயுள்ளது** எனக்கூறி முடிவுறுத்துகின்றேன்.

இவற்றுடன் நான் நிறுத்திக்கொள்கின்றறேன். உங்களது வினாக்களுக்கு பதிலளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். நன்றி.